விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 52 | சித்திரை - 2001 | பககங்கள் 12 | ஒளி 51

## ★ கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களுக்கு

# நினைவுமுத்திரை வெளியிடுவதற்கு

# யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடவடிக்கை!

## 10-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம்.

வடபகுதி கூட்டுறவின் தந்தை என கூட்டுறவாளர்களினால் மதிக்கப் பட்டு வரும் கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம் அவர்களுக்கு அவரது ஞாபகார்த்தமாக நினைவு முத்திரை வெளியீடுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் பத்தாவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ கனக சபாபதி தலைமயில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

அமரர் வி. வீரசிங்கம் அவர்களின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டை கடந்தவருடம் நடைபெற்ற அமரர் வீரசிங்கம் அவர்களின் நினைவுதினக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதிற்கிணங்க, இவ்வாண்டு மார்கழிமாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள நினைவு தினத்தன்று அவரது கம்பீரத்தோற்றமுடைய உருவப்படத்தைத் தாங்கிய நினைவு முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தபால் திணைக்களத்தையும், தேசிய கூட்டுறவுசபை, கூட்டுறவு அமைச்சர் ஆகியோரை இப்பொதுச் சபை கோருகின்றது.

அக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட பிறிதொருதீர்மானம்வருமாறு;

பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் வடமராட்சி கொத்தணியால் நடாத்தப்பட்டு வந்த திக்கம் வடிசாலையை கொத்தணியின் சம்மதம் இன்றி பனை அபிவிருத்திச் சபை வலுக்கட்டாயமாகப் பொறுப்பேற்றமையினால் அச்சங்கங்களின் அங்கத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

எனவே திக்கம் வடிசாலையை திரும்பவும் வடமராட்சிக் கொத்தணியிடம் ஒப்படைக்கப் பனை அபிவிருத்திச் சபையிடம் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பொதுச் சபை கோர வேண்டும் என்ற பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டதுடன், இதனோடு தொடர்புடைய அனைவருக்கும் இதனை அறிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### உள்ளே....

* கூட்டுறவு இயக்கத்தின் பூரண வெற்றிக்கும
* பொது அறிவு
* வணிகக் கல்வி வினாவிடைத் தொடர்
* உங்களுக்கு நாற்பது வயதா?
* தொழிற்சங்கங்களும்தொழிலாளர் சட்டங்களும
* உங்கள் பயிருக்கு திரவப்பசளை அவசியமா?

# கூட்டுறவு இயக்கத்தின் பூரண வெற்றிக்கும் நல்லியக்கத்திற்கும் அவசியமான காரணிகளும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கடந்த கட்டுரையில் கூட்டுறவியக்க வளர்ச்சியில் அரசாங்கத்தின் பங்கு பணிகளைப் பற்றியும் கூட்டுறவு இயக்கத்தின் மீது அரசாங்கத்தின் எல்லையற்ற தலையீடு இருப்பதினால் கூட்டுறவியக்கத்தின் மீது ஏற்படும் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் அரசாங்கத்தின் எல்லையற்ற தலையீட்டினால் கூட்டுறவியக்கத்தின் புனிதத்தன்மையும் இயல்பு நிலையும் சுதந்திரமும், தன்னாதிக்கமும் பாதிக்கப்பட்டு அவ்வியக்கம் ''அரசாங்கத்தின் பணிப் பெண்'' போன்று செயற்படுவதாக ஆழ்ந்த கவலையும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலை முற்றாகமாறி கூட்டுறவியக்கம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உள்படாமல் பூரண இறைமையும், தன்னாதிக்கமுள்ள பூரண மக்கள் இயக்கமாகத் திகழ்வதற்கு கூட்டுறவாளர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக ஆராயப்படவேண்டியது எமது தலையாயகடமையாகும்.

அரசாங்கத்திடமும் அரச வங்கிகளிடமும் நன்கொடைகளுக்கும், உதவு தொகைகளுக்கும், கடன்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் செல்லுவதினால் தான் அவை அரசாங்கத்தினதும் அரசவங்கிகளினதும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு தன்னாதிக்கத்தையும் சுதந்திரத்தையும் இழக்கின்றன. இங்கிலாந்து, சுவீடன், டென்மார்க், கனடா போன்ற மேலைத்தேச நாடுகளிலுள்ள கூட்டுறவு அமைப்புக்கள் அரசாங்கத்திடமும், அரசவங்கிகளிடமும் கடனுக்குச் செல்லாமல் தமது சொந்த முதலில் இயங்குவதினால் அவை அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் பூரண சுதந்திரமுள்ள மக்கள் அமைப்புக்களாக இயங்குகின்றன. யாழ் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசிடம் கடனுக்கும் உதவு தொகைகளுக்கும் செல்லாமல் தமது சொந்த முதலில் இயங்குவதினால் இவ்வமைப்புக்கள் பூரண மக்கள் அமைப்புக்களாக இயங்குவதற்கு வாய்ப்புக்கள் நிறைய உண்டு. இவ் வாய்ப்புக்களை பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். ஏனைய கூட்டுறவு அமைப்புக்கள் தமக்குவேண்டிய போதிய சொந்த முதலை ஏற்படுத்திக்கொள்ள பின்வருவரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

1 இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கத் தகுதியுள்ள மக்களில் இருபது வீதத்திற்குக் குறைவானவர்களே கூட்டுறவு அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எண்பது வீதத்திற்கு மேற்பட்டோர் இதுவரை கூட்டுறவு அமைப்புக்களில் அங்கத்துவம் பெற முன்வரவுமில்லை. கூட்டுறவு அமைப்புக்கள் அவர்களை அங்கத்தவர்களாகச் சேர்க்க இதுவரை எதுவித செயற்றிறன் மிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவுமில்லை இதனா சங்கங்களின் சொந்த முதலின் முக்கிய கூறான பங்குப்பணம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. அங்கத்தவரைப் புதிதாகச் சேர்க்கவும், பங்குப்பணத்தைப் பன்மடங்காக அதிகரிக்கவும் கூட்டுறவு அமைப்புக்கள் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

இ. சுப்பிரமணியம்
இளைப்பாறிய அதிபர் கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம்

1. 1 நுகர்வோரும், விவசாயிகளும், தொழிலாளர்களும் கூட்டுறவு அமைப்புக்களில் அங்கத்துவம் பெற வேண்டியதன் அவசியம் பற்றியும் அங்கத்துவம் பெறுவதால் அவர்கள் பெறக் கூடிய அனுகூலங்களைப் பற்றியும் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள் தொலைக்காட்சிகள், நாடகங்கள் படக்காட்சிகள் மூலம் நாட்டு மக்கள் அனைவருக்கும் போதிய பிரசாரம் செய்ய கூட்டுறவு அமைப்புகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1. 2 அங்கத்தவர் அல்லாதவர்கள் சங்கத்தில் கொடுக்கல் வாங்கல் செய்து அதனால் அவர்களுக்குப் போக வேண்டிய இலாபாகத்தை ''அங்கத்தவர் அல்லாதவருக்குரிய இலாபம்'' என ஒதுக்கிவைத்து அதனை அவர்களின் பங்குப் பணமாகக் கொண்டு அவர்களை அங்கத்தவர்களளச் சேர்க்க துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

1 3 பநோ கூ.சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்ட பலர் தமது பங்குப் பணத்தை முழுமையாகச் செலுத்தாமல் குறைந்த தொகையை செலுத்திய அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றனர் பலர் ஒருரூபா பெறுமதியான பங்குப்பணத்துடனும் பத்துரூபா பெறுமதியான பங்குப் பணத்துடனும் காணப்படுகின்றனர். சங்கத்தின் பங்கொன்றின் பெறுமதி ரூபா நூறாக அதிகரிக்கப்பட்ட போதிலும் இவ்வங்கத்தவர்கள் இதுவரை தமது பங்கைமுழுமையானதாக்க முன்வரவில்லை. இதனால் பல அங்கத்தவர்கள் அங்கத்தவ உரிமைகளை இழந்த நிலையில் இருக்கின்றனர் ப.நோ.கூ. சங்கங்கள் அரையுர, குறையுமாக உள்ள பங்குகளை முழுமைப்படுத்த துரிதமான பிரச்சார நடவடிக்கைகளைக் காலம் பிந்தாமல் மேற்கொள்ள வேண்டும்.

1. 4 அகில உலக கூட்டுறவுச் சம்மேளனம் புதிதாகப் பிரகடனப்படுத்தியுள்ள ''அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு'' என்ற புதிய கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தமக்கு சங்கத்திலிருந்து வருமதியாகவுள்ள பங்குமீது வட்டிக்கும், ஆதரவுக்கேற்ற தள்ளுபடிக்கும் (இலாபாகம்) உரிமை பாராட்டிப் பெற்றுக் கொள்ளாமல் அவற்றைத்தமது பங்குப்பணத்துடன் சேர்த்துக் கொள்ள சங்கத்திற்கு வருடாவருடம் அனுமதி கொடுக்க வேண்டும்.

1. 5 இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் பணவீக்கத்தினாலும், விலையேற்றத்தினாலும் பணத்தின் பெறுமதி குறைந்துள்ளதால் அங்கத்தவர் சங்கத்தில் கட்டியுள்ள பங்கின் பெறுமதியும் குறைந்துள்ளது. இக்குறைவை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் பங்கு ஒன்றின்பெறுமதியைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பொருட்களின் விலை

(11ம் பக்கம் பார்க்க)

# பொது அறிவு - GENERAL KNOWLEDGE

❋ நாடாளவிய ரீதியில் இயங்கி வந்த தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் அரசுடமையாக்கப்பட்டு இலங்கைப் போக்குவரத்து சபையாக ( இ போ. ச ) 1958 ஆண்டு நிறுவப்பட்டது

❋ இலங்கையில கணக்காளர்களை உருவாக்கி வரும் நிறுவனம் இலங்கை முகாமைத்துவப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் 1919 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

❋ போதைப் பொருள் ஒழிப்பு, தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடவென அரசாங்கம் உருவாக்கியுள்ள நிறுவனம் தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை

❋ இலங்கையில் புற்று நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் தேசிய புற்று நோய் மருத்துவமனை அமையப் பெற்றுள்ள இடம் மஹரகம

❋ இலங்கைப் புற்று நோய்த் தடுப்புச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆண்டு 1948

❋ இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன 1962 இல் நிறுவப்பட்டது

❋ அரசாங்கத்தால் நாட்டின் தொலைத் தொடர்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இத்திணைக்களம் 1990 இல் சிறீ லங்கா ரெலிக்கொம் தனியார் மயமாகியது

❋ எயர் லங்கா (Air Lanka) 01 - 09 - 1979 இல் நிறுவப்பட்டது

❋ இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சியை பெறும் மாவட்டம இரத்தினபுரியாகும். ஆகக்குறைந்த மழைவீழ்ச்சி பெறுவது அம்பாந்தோட்டை மாவட்டம்

❋ தேசிய இயற்கை அழிவு முகாமைத்துவ நிலையம 1996 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம வெள்ளம, புயல், வரட்சி ஆகிய இயற்கை அழிவுகளை முற்கூட்டியே அறிந்து அதனைத் தடுப்பதற்கான முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது

❋ பெருங்குளங்களை முதலில் கட்டிய மன்னன் வசபன், மகாசேனன் இவர்கள் "மின்னேரியாவின் தெய்வம்" எனப் போற்றப்படுகின்றான்

❋ இலங்கையின் தற்போதைய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் இப்பாராளுமன்றம் ஜப்பானிய அரசின் நன்கொடையாக நிர்வாகிக்கப்பட்டு 1982 ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது

❋ இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்யும் ஏடு "ஹன்சார்ட்" என அழைக்கப்படுகின்றது

❋ இலங்கையின் மிக நீளமான பாலம் வேலணை புங்குடுதீவுப்பாலம் இது மூன்று மைல் நீளமானது.

❋ இலங்கை ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வதிவிடம் ஜனாதிபதி மாளிகை.

❋ இலங்கைப் பிரதமர் உத்தியோக பூர்வ வதிவிடம் அலரிமாளிகை.

❋ இலங்கை சபாநாயகர் உத்தியோக பூர்வ வதிவிடம் மும்தாஜ் மஹால்.

❋ மூவின மக்களாலும் வழிபடச் செல்லும் புனித மலை சிவனொளிபாதமலை.

❋ இலங்கையின் புகழ் பூத்த குகை ஓவியங்கள் சிகிரியா.

❋ இலங்கையில் ஆகக் குறைந்த சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம் நுவரெலியா. ஆகக் கூடிய சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம் திருகோணமலை.

❋ இலங்கையிலுள்ள தீவுகளில் பெரியவை ஊர்காவற்றுறை, நெடுந்தீவு.

❋ இலங்கையின் தொலைக்காட்சிச் சேவை 1978ம் ஆண்டில ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம 1982ம் ஆரசாங்கத்தின் நன்கொடையாக கட்டிக் கொடுக்கப்பட்டது.

❋ இலங்கையின் சர்வஜன வாக்குரிமை 1931 இல் ஆயற்றப்பட்ட டொனமூர் யாப்பின் மூலம் நடைமுறைக்கு வந்தது.

❋ இலங்கையின் முதல் முத்திரை 1857ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.

❋ இலங்கையில் அஞ்சல் அலுவலகம் 1895 ஆம் ஆண்டு கொழும்பில் திறக்கப்பட்டது.

❋ சுதந்திர இலங்கையின் முதற்பிரதமர் D S. சேனநாயக்கா ஆவர்.

தொகுப்பு : வே. ம. மாறன்

# வணிக கல்வி வினாவிடைத்தொடர்

"பண்டமாற்று" என்ற பதத்தை வரையறுத்து இதில் காணப்படும் குறைபாடுகளைக் குறிப்பிடுக?

பொருட்களை பெறுவதற்காக பொருட்களை பரிமாற்றிக்கொள்ளும் நடைமுறையே பண்டமாற்று எனப்படும். அதாவது. சீனியை பெறுக் கொள்வதற்காக நெல் பரிமாற்றப் படப்பட்டிருப்பின் அது பண்டமாற்று ஆகும் பண்டமாற்றில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

i பரிமாற்றத்தில ஈடுபடும் இருசாராரினதும் தேவைகள் பொருந்தாமை
ii பொருட்களின் சரியான பெறுமதியை மதிப்பிட முடியாமை
iii தேவைக்கேற்ப சிறு அலகுகளாக பிரிக்க முடியாமை
iv பிற்போட்ட கொடுப்பனவாக மேற்கொள்ள முடியாமை
v நீண்ட காலத்துக்கு சேமித்து வைக்க முடியாமை

பணம்' என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

பண்டமாற்றில் காணப்பட்ட குறைபாடுகளின் தீர்வாக தோன்றியதே பணமாகும். அதாவது. நாளாந்த கொடுக்கல், வாங்கல்களை இலகுவாக மேற்கொள்வதற்கு பரிமாற்று ஊடகமாக பயன்படுத்த கூடியதும் சமூகத்தின் எல்லா தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான சட்ட ரீதியான கருவியே பணமாகும்

பணத்தின் பண்புகள் எவை?

i சட்டரீதியான அங்கிகாரம் பெற்றிதல்
ii சமூகத்தின் சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல்
iii எளிதில் உருவாக்க முடியாததாயும் நீண்ட ஆயுளையுடையதாயுமிருத்தல்
iv இலகுவில் இனம் காணக்கூடியதாயிருத்தல்
v கையாள்வதற்கு இலகுவாயிருத்தல்
vi அருமைத்தன்மை உடையதாயிருத்தல்
vii சிறுசிறு அலகுகளாக பிரிக்ககூடியதாயிருத்தல் ஆகிய பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும்

பணத்தின் வகைகளை குறிப்பிட்டு விளக்குக?

1 சட்டமுறை / அடையாள பணம்:

நூறுவீத திரவத்தன்மையுடையதும் அரசின் சார்பில் வெளியிடப்படுகின்றதுமான தாள், குற்றி நாணயங்களே இதுவாகும்.

2 கிட்டிய / போலி பணம்

குறுங்கால முன்னறிவித்தலுடன் சட்ட முறைப் பணமாக மாற்றக்கூடிய சேமிப்பு, காலவைப்பு சான்றிதழ்கள் திறைசேரி உண்டியல், மாற்றுண்டியல் போன்ற நிதிச் சொத்துகளையே கிட்டிய பணம் என்பர்.

3 வங்கிப் பணம் :

பொதுமக்கள், நிறுவனங்களின் பெயரில் வணிக வங்கிகளில் பேணப்படும் கேள்வி வைப்புகளையே வங்கிப் பணம் என்பர். இது காசோலை வரைவதன் மூலம் பொருட்கள் சேவை பரிமாற்றத்தில பயன்படுத்தப்படுகிறது.

4 பிரதிப்பணம் :

சட்டப்பணத்திற்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டதும் பணத்தின் பணிகளை செய்கின்றதுமான சட்டரீதியான ஆவணங்களை பிரதிப்பணம் எனலாம். இதற்கு உதாரணமாக இலங்கை வங்கியின Bank Card, மக்கள் வங்கியின் People Card சம்பத் வங்கியின் Master Card என்பவற்றைகுறிப்பிடலாம்.

5. ஆவண பணம் .

சட்டமுறை பணத்திற்கு பதிலாக பயன்படுத்தப்படும் Money Order, Postal Order போன்றனவே ஆவண பணமாகும்.

பணத்தின் தொழிற்பாடுகளை விபரிக்குக?

1. மாற்றுடக தொழிற்பாடு :

தேவைகளின் இரட்டைப் பொருந்துகையின்மை என்ற குறைபாட்டை நீக்கும் தொழிற்பாடாக இது காணப்படுகிறது. கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பொருட்கள் சேவைகளை உரிமைமாற்றம் செய்வதற்கு பணம் பயன்படுத்தப்படுவதையே இத்தொழிற்பாடு குறிக்கிறது.

2 கணக்கியல் அலகுக் தொழிற்பாடு:

பொருட்கள் சேவைகளின் பெறுமதியை மதிப்பிட முடியாமை என்ற பண்டமாற்று குறைபாடு நீக்கப்படுகிறது

3 பிற்போட்ட கொடுப்பனவின் நியமன தொழிற்பாடு :

நிகழ்கால கொடுப்பனவொன்றை எதிர்காலத்தில் தீர்த்துக்கொள்வதற்கு பணம் பயன்படுதலை இது குறிக்கிறது.

4 பெறுமான திரட்டுத் தொழிற்பாடு:

தற்கால நுகர்வுக்கு மிஞ்சியதை எதிர்கால நுகர்வை மேற்கொள்வதற்காக பணமாக சேமித்து வைத்தலை இதுகுறிக்கும். இதன் மூலம் பண்டமாற்றின் சேமிக்க முடியாமை என்ற குறைபாடு நீக்கப்படுகிறது.

வே. மணிவதனன்
முகாமைத்துவ வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பணத்தின் உள்நாட்டு பெறுமதி வெளிநாட்டுப் பெறுமதி வேறுபடுத்துக?

ஒரு அலகு நாணயத்தை கொண்டு அந்நாட்டின அரசியல் பொருளாதார எல்லைக்குள் கொள்வனவு செய்யக் கூடிய பொருட்கள் சேவைகளின் அளவே உள்நாட்டு பெறுமதியாகும்

ஒரு அலகு நாணயத்தை கொண்டு வெளிநாடு ஒன்றில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவே வெளிநாட்டு பெறுமதி ஆகும். உள்நாட்டு பெறுமதி பொதுவிலை மட்டத்தாலும், வெளிநாட்டு பெறுமதி நாணய மாற்று விகிதத்தினாலும் நிர்ணயிக்கப்படும்.

'பணநிரம்பல்'' என்பதை விளக்கி அதன் வகைகளை குறிப்பிடுக?

குறித்தகால எல்லையில் குறித்த ஒரு நாட்டின் பொதுமக்களிடம் உள்ள தாள் உலோக நாணயங்களையும் கேள்வி வைப்புக்களையும் அக்காலப் பகுதியான பண நிரம்பல் என்பர். இது மிகக்குறுகிய, குறுகிய, விரிந்த பணநிரம்பல் என பாகுபடுத்தப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## சுகவளம்

# உங்களுக்கு நாற்பது வயததா?

"நாற்பது வயதைத் தாண்டிய ஆடவர்களுக்கு மட்டுந்தான ஆலோசனைகள்? பெண்டிருக்கு இல்லையா? எனக்கேட்கும் சிலருக்கு புள்ளி விபரங்கள் ஆதாரமாகவுள்ளன.

இதய இரத்தக் குழாய்க்கோளாறானது நாற்பது வயதைத் தாண்டிய நபர்களில ஆடவர்கள் மத்தியில் 43 சதவீதமானோரிடம் தென்படுவதாகவும் பெண்கள் மத்தியிலோ 23.3 வீதமானோரிடம் தென்படுவதாகவும் 93ம் ஆண்டின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் மிகு இரத்த அழுத்தத்தினால் மரணமடைவோரில் ஆடவர்கள் தொகையே இருமடங்காகவும், "மையோ கார்டியல் இஸ்சிமியா" வினால் மரணமடையும் நபர்களில ஆடவர்களின் தொகையே ஐந்து மடங்காகவும் உள்ளது அத்துடன் மனிதர்களின ஆயுட்காலத்தைப் பார்த்தாலும் சராசரியாக நோக்குமிடத்து பெண்களின ஆயுட்காலத்தைக் காட்டிலும ஆடவரின ஆயுட்காலம் 8 ஆண்டுகள் குறைவாகவும் உள்ளதெனவும் புள்ளி விபரம் கூறும் அத்தகைய இந்த வித்தியாசம் அதிகரித்துக்கொண்டு செல்வதைத்தும் எம்மால அறியமுடிகின்றது. எனவே ஆடவருக்கே, அதுவும 40 வயதைத் தாண்டியவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான காரணத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

மருத்துவர்களின் கருத்துப்படி நாற்பது வயதிற்குப் பிறகே ஆடவரின ஆரோக்கியம் குன்றத் தொடங்குகிறது. இந்த வயதைத் தாண்டிய பிறகு தான் தம்முள் இதயம் ஒன்று உள்ளதென்று கூடச்சிலர் உணர்வதுண்டு. 40 வயதைத் தாண்டியவர்கள் நோயுநொடிகளின்றித் தொடர்ந்து 20-30 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து தமக்கும், பிறருக்கும் நன்மை பயக்கும் விதத்தில் வாழ்வதே மேலானதாகும். ஏனெனில் 40 வயதென்பது உடல் மற்றும் படைப்பாக்க விடயங்களில் பரிபக்குவம் மிக்க வயதாகும். ஆயினும் இந்த வயதில் ஒருவர் தமது ஆரோக்கிய விடயத்தில் அசிரத்தையாக இருந்து விட்டால் அதனால் ஏற்படும் கோளாறு அவரைப் பல நோய்களுக்கும் ஆளாக்குவதுடன் படுபாதாளத்திற்கே தள்ளிவிடக்கூடும்.

தற்கால விஞ்ஞான உலகம் இதற்கான மருந்துகள் விடயத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளன. இதய இரத்த ஓட்ட மண்டலம் பெருமளவில பாதிக்கப்பட்டவருங்கூட திறமையோடும, செயலூக்கத்தோடும் பணியாற்றவும் மாரடைப்பு தாக்குதல்களிருந்து மாந்தரின் உயிரைக் காக்கவும உதவும மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன இருதய சத்திரசிகிச்சை மூலமும பெருமளவு நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையும உருவாகி விட்டது. எனினும் நோயை வந்தபின தடுப்பதைவிட வருமுன் தடுப்பதே சாலவும் சிறந்தது. எனவே நோய் வராமல் தடுப்பதாயின் நோயைப் பற்றிய தெளிவான ஞானமும் மிக அவசியமாகும்.

மனிதன் தனது சொந்த வேலைக்கும் தனக்குக் கீழ் வேலைபார்ப்போரின் வேலைகளுக்கும், தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்கும் குழந்தைகளின் வருங்காலத்திற்கும பொறுப்பேற்றுக்கொள்ளும் முழுமனிதனாக மாறுகின்றான். இதேவயதில் தான் அவனுக்கு ஒழுக்க நெறிகள் பற்றிய திட்டவட்டமான கருத்துக்களும் தன்னுள் உருவாகி தன்னைத்தான் உணர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் உண்டாகிறது

இத்தகைய நிலையிலுள்ள மனிதனுக்கு பெரும் அநியாயங்களையோ, அநீதிகளையோ காணும்போது உணர்ச்சிகள் கொதிப்பதுடன் அவ்வுணர்ச்சிக் கொதிப்புகள் அவனது உயிருக்கே உலை வைத்தும் விடுகின்றன. குடும்பத்தில் உறுதியான தன்மையின்மை, முரண்பாடுகள்மிக்க சூழ்நிலை போன்றவை கடுமையான கொள்கையற்ற நோக்குடைத்து அநேகமானோருக்கு இந் நோய் சம்பந்தமான விளக்கங்களிருந்த போதிலும, இத்தகைய நோய் தோன்றுவதற்கு முக்கிய காரணிகளில ஒன்று மதுபாவனை பழக்கமாகும். ஏனெனில் விடயத்தில் நரம்பு மண்டலத்திற்கு அபரிமிதமான வேலை கொடுக்க நேரவதே இதயக்கோளாறு தோன்றப் பெரிதும காரணமாகின்றது. மேட்டுநிலங்கள் குலைந்துபோதல நெருங்கிய நண்பர் அல்லது உறவினர்கள் மரணம், வாழ்க்கையில ஏற்பட்ட தோல்விகள் போன்றவற்றால ஏற்கனவே பெரும் அதிர்ச்சிக்குள்ளானவர்களையே மாரடைப்பு பெரிதும பாதிப்பதாகத் தெரிய வந்துள்ளது. இத்தகைய நபர்களுக்குத் தூக்கமின்மை, தலைவலி, இதய வலி போன்ற கோளாறுகள் முதலில தோன்றுவதுடன், மாரடைப்பு ஏற்படுவதற்குமுன்னால் இவர்கள் திராத கவலை, நீங்காத பீதி போன்ற உணர்வுகளையும அனுபவிக்கிறார்கள். இறுதியாக மாரடைப்பு ஏற்படுவதற்குச் சற்று முன்பு இத்தகையோரில கிட்டத்தட்ட 40 சதவீதமான நோயாளிகள் கடுமையான மனோநிலைத் தாக்குதல்களுக்கும உள்ளாகின்றனர்.

இத்தகைய நெருக்கடியான நிலைமைகள் 40 வயதிற்கு முன் தோன்றினாலும் பொதுவாக 40 வயதிலேயே மாரடைப்பு ஏற்பட ஏதுவாகின்றது. மேலும 40 வயதில் ஆடவரில் இரத்த நாளங்கள் தாம முன்னர் பெற்றிருந்த இழுவைத் திறனை விடக் குறைவாகயிருப்பதும், இதயமானது விரிந்து சுருங்குதல போதிய அளவுக்கு இல்லாமல குறைந்து விடுவதும மாரடைப்பிற்குக் காரணங்களாகும்.

எனவே 40 வயதைத் தாண்டியவர்கள் எதற்கும் மனதை அலட்டிக் கொள்வதிலும, கவலைப்படுவதிலும தன்னைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும. சாதகமான அல்லது பாதகமான உணர்ச்சிப் பெருக்குகளைத் தவிர்ப்பது சிரமமாயினும சகிப்புத் தன்மையுடனும்மனக்கட்டுப்பாட்டின் மூலமும தொல்லைகளையும துயரங்களையும் நிதானமாகஏற்றுச சமாளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இதனபோது தனது மனதிற்குத்தானே கட்டளையிட்டுநிதானத்துடனசெயல்படவைக்கும பயிற்சி நல்ல பயனை விளைவிக்கும்.

அதேபோல் 40 வயதைத் தாண்டியவர்கள் போதிய ஓய்வைப் பெறுவதும் அவசியமாகும். அதிகாலையில் எழுதல், காலையில் தேகப் பயிற்சிகள செய்தல், காப்பி மற்றும் கொழுப்புச் சத்துமிக்க உணவுகளைத் தவிர்த்தல், அன்றாடவேலைகளில் ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்

(8ம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்கங்களும் தொழிலாளர் சட்டங்களும்

தொழில் கொள்வோர் அல்லது தொழிலாளர் தமது தொழில்சார் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்குமென தன்னிச்சையாக உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்பே தொழிற்சங்கமாகும். பொலிஸ், இராணுவம், சிறைச்சாலை, உத்தியோகத்தர், நீதித்துறை அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அரச, தனியார், கூட்டுறவு ஆகிய துறைகள் சார்ந்த ஊழியர்கள் தொழிற்சங்கமானது தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி தொழில் கொள்வோருக்கும் உரியது என்றாலும் தொழிலாளர்களுடனேயே இது பொதும ஈடுபாடு கொண்டுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் ஏழு பேருக்கு குறையாத ஊழியர்கள் இணைந்து தொழிற்சங்கமொன்றை ஆரம்பிக்க முடியும். அவ்வாறு ஆரம்பிக்கப்படும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர் நலன்களைப் பேணுவதில் நாட்டம் கொண்டிருக்கும். இதே போன்று தொழில் கொள்வோர் சார்பான அமைப்பே தொழில் தருநர் கூட்டவை என அழைக்கப்படுகின்றது.

தொழிலாளர் உரிமைகளைப் பெறுவதற்கும் பேணிப் பாதுகாப்பதற்குமென உருவாக்கப்படும் தொழிற்சங்கத்திலிருந்து வேறுபடுபவையே தொழிற்சங்க கூட்டவையும் தொழிலாளர் சபையுமாகும். தொழிற்சங்க கூட்டவையே தொழிற்சங்கங்களின் ஒன்றிணைப்பாகும். அதாவது தொழிலாளர் ஒன்றுகூடி தொழிற்சங்கமொன்றை உருவாக்கினால் தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி தொழிற்சங்க கூட்டவையை உருவாக்கும். தொழிற்சங்கங்களுக்கிடையே ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும் போட்டியைத் தவிர்ப்பதற்குமான ஒரு அமைப்பாக இது கொள்ளப்படுகின்றது. தொழில் கொள்வோருடன் பேரம் பேசுவதிலும் உரிமைகளை வென்றெடுப்பதிலும் தொழிற்சங்க கூட்டவை முக்கிய இடம் வகிக்கின்றது.

தொழிலாளர் சபை என்பது தொழிற்சங்கத்திலிருந்தும் வேறுபடும் அமைப்பாகும், 1979 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ''ஊழியர் சபைச் சட்டம்'' என்ற ஒன்றின் பிரகாரம் தொழிலாளர் சபை நடைமுறைக்கு வந்தது. தொழிலாளர்களிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தொழிலாளர் சபை உருவாக்கப்படுகின்றது. இந்த அமைப்பின் நோக்கமெல்லாம் முதலாளி எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆலோசனை வழங்குவது என்பதாகும். முகாமையில் தொழிலாளர் பங்குபற்றல்'' எனும் புதிய கருத்து கோளை அடைந்து கொள்ளும் நோக்குடனேயே தொழிலாளர் சபை உருவாக்கப்பட்டு ஆலோசனை பெறப்படுகின்றது.

தொழிலாளர் நலன்களைப்பேணுவதில் அக்கறை கொண்ட அமைப்பென தொழிற்சங்கங்கள் கருதப்படுவதனால் அதன் சார்பாக சில நோக்கங்களை அது கொண்டிருக்கின்றது.

தொழிற் சங்கத்தின் நோக்கங்கள்:-

1 தொழிலாளர், தொழில் கொள்வோருக்கிடையிலும் அல்லது தொழிலாளர், தொழிலாளருக்கிடையிலும் அல்லது தொழில் கொள்வோர், தொழில் கொள்வோருக்கிடையிலும் உள்ள தொடர்பை ஒழுங்கு படுத்துதல்.

i தொழிற்சாலைகளை அல்லது நிறுவனங்களை நடத்துதல் தொடர்பான வரையறைகளை நிர்ணயித்துக் கொள்ளல்.

ii தொழில் பிணக்குகள் ஏற்படும் போது அவற்றில் தொழிலாளருக்காக அல்லது தொழில் கொள்வோருக்காக பிரதிநிதித்துவப்படுத்தல்.

iv நிறுவனங்களில் வேலை நிறுத்தம், நிறுவனங்களின் கதவடைப்பு ஆகிய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதி சார்ந்த அல்லது பொருள் சார்ந்த உதவிகள் வழங்கல்

v தொழிலாளர் நலன்களைப் பேணும் வகையில் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு ஆலோசனை வழங்கல்

vi தொழில் கொள்வோர், தொழிலாளரது நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுக்காத விடத்து நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதித்தல் உ+ம் சட்டப்படி வேலை, அடையாள வேலை நிறுத்தம், வேலை நிறுத்தம், தாமத வேலை

என்ற வகையிலே பல நோக்கங்களை அடக்கியதாக தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றது.

தொழில் கொள்வோர் தொழிலாளர் உறவு சரிவர அமைய இரு சாரரும் தத்தமது கடமைக் கூறுகளையும், பொறுப்புக்களையும் சரிவர உணர்ந்து செயற்பட வேண்டும்.

தொழில் கொள்வோரின் கடமைகளும் பொறுப்புக்களும்:-

i சம்பளக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி கூலியை அல்லது சம்பளத்தை உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் வழங்கல்

2 சம்பள கட்டுப்பாட்டுச் சட்டப்படி நிச்சயிக்கப்பட்ட இழிவுக்கூலிக்கு குறைவில்லாத சம்பளம் வழங்கல்

3 தொழிலாளர் உரிமைகளை மதித்தல்

4 ஊழியருக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் உ+ம் ஆக உடல் உள, எதிர்கால பாதுகாப்பு

5 நிறுவனம் தனது குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வண்ணம் ஊழியர்களுக்கான ஒழுங்காற்றுக் கோவைகளைப் பேணல்

6 சம்பள கட்டுப்பாட்டுச் சபை அமைக்கப்பட்ட சேவை, கைத்தொழில் நிறுவன வேலை கொள்வோர் தமது ஊழியரது சம்பளப் பட்டியலை தயாரிக்க வேண்டும். அதனை ஆறு மாதம் வரை அதற்கான குறிப்புகளுடன் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். (விசாரணைக்குச் சமர்ப்பிக்க கூடியதாக)

7 சம்பள கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தீர்மானங்களை எல்லா ஊழியர்களும் பார்க்கக்கூடியதாக காட்சிக்கு வைத்திருக்க வேண்டும்

8 ஊழியர் ஒருவர் வேலையிலிருந்து நீங்கிச் செல்லும் போது சேவைச் சான்று வழங்குதல் வேண்டும்.

9. ஊழியர்களுக்குரித்தான எல்லாச் சட்ட முறையான லீவுகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

10 ஊழியர் ஒருவர் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டால் அதன் கூட்டங்களுக்குச் செல்ல ஊழியரை அனுமதிக்க வேண்டும்.

(7ம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்கங்களும்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களது கடமைகளும் பொறுப்புக்களும்:-

1 தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணியையும் தொழில் கொள்வோரின் சட்ட ரீதியான கட்டளைகளையும் நிறைவேற்றுதல்

2 தொழில் தொடர்பான கருமங்களில் களவுகள் மோசடிகளிலிருந்து விலகியிருத்தல்

3 வேலை நேரத்தில் குடிபோதையிலிருந்து விலகுதல்

4 வேலைகளை உதாசீனஞ் செய்யாதிருத்தல்

5 வேலை கொள்வோரின் முன் கூட்டிய அனுமதி பெறாமல் எழுத்தாவணங்களையும், தொழில் சம்பந்தமான விடையங்களையும் வழங்காதிருத்தல்

6 நிறுவன விதிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் இணங்கி நடத்தல்

7 நிறுவனத்திற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

தொழில் கொள்வோரும், தொழிலாளரும் தமது கடமைக் கூறுகளில் தவறாது இருப்பதற்கும் தவறுவோரால் மறுசாரார் பாதிக்கப்படாது இருப்பதற்கும், அரச சட்டவாக்கங்கள் மூலம் பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது இவை பெரும்பாலும் தொழிலாளருக்கு சார்பான தொழிற் பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டவையாகும்.

தொழிலாளர் சார்பான சட்டங்கள்:-

இலங்கையில் தொழிலாளர் நலன்களைப் பேணும் வகையில் காலத்துக்கு காலம் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இத்தகைய சட்டங்களை ஐந்து பெரும் பிரிவுக்குள் கொண்டு வரலாம். அவையாவன;

தொழில் நிபந்தனைக்கான சட்டங்கள்:

தொழிலாளர்களின் வேதனம், கூலி, வேலை நிபந்தனைகள் ஆகியவற்றை வரையறுக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள்

i 1941 ஆம் ஆண்டு 27ஆம் இலக்க கூலி நிர்ணய சபைக் கட்டளைச் சட்டம்

ii 1954 ஆம் ஆண்டு 19ம் இலக்க காரியாலய ஊழியர் சட்டம்

இவை இரண்டும் அரச, தனியார், கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிபந்தனைகள் சம்பந்தப்பட்டதாகும்;

சமூக பாதுகாப்புச் சட்டங்கள் :

தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் அடிப்படையில் பல சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள்;

i 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாபநிதிச் சட்டம்

ii 1980 ஆம் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம்

iii 1983 ஆம் ஆண்டு 12ம் இலக்க ஊழியர் பணிக் கொடைச்சட்டம்

iv 1939 ஆம் ஆண்டு 32ம் இலக்க மகப்பேறு கட்டளைச் சட்டம்

தொழில் உறவுச் சட்டங்கள் :

முதலாளி தொழிலாளிக்கிடையில் நல்லுறவைப் பேணுகின்ற வகையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன இவற்றுள்

i 1935 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க தொழிற் சங்க கட்டளைச் சட்டம்

ii 1950 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க கைத் தொழில் பிணக்குகள் சட்டம்

iii 1971 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க ஊழியர்கள் பதவி நீக்குதற் சட்டம்

இவற்றின் உதவியுடன் தொழில் பிணக்குகள் தீர்க்கப்பட முடியும்.

தொழிற் பாதுகாப்புச் சட்டங்கள்:

தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடுமான பல்வேறு விபத்து நட்டங்களிலிருந்து பாதுகாப்பை பெறுவதற்கான சட்டங்கள் இவையாகும் இவற்றுள்;

i 1949ம் ஆண்டு 54 ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

ii தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் [illegible]

இவை தொழிற்சாலைகளில் பாதுகாப்பு காற்றோட்டம், வெளிச்ச வசதிகளைப் பெற்றுத் தருவதாக அமையும்.

ஏனைய சட்டங்கள் :

தொழிலாளர் சார்பாக முன்னர் கூறப்பட்ட சட்டப் பிரிவுகளுக்குள் அடங்காதவை இப்பிரிவுக்குள் அடக்கப்படும். இவற்றுள் 1956ம் ஆண்டு 47ம் இலக்க பெண்களையும், இளஞ்சிறார்களையும் சேவைக்கமர்த்துதல் தொடர்பான சட்டம்; என்பது முக்கியம் பெறும். இது நிறுவனங்களில் பெண்களையும், சிறுவர்களையும் வேலைக்கமர்த்துவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதாகும்.

தொழிலாளர் நலன்களைப்பேணுவதில் தொழிற்சங்கங்களும் தொழிலாளர் சார்பான சட்டங்களும் முக்கியம் பெறும் இதன் காரணமாகவே தொழிற்சங்கங்கள் பற்றி கூறும் பொழுதெல்லாம் தொழிற் சட்டங்களையும் இணைக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே தொழிற் சங்கங்களைப் பதிவு ஏற்பதும் மேற்பார்வை செய்வதுமான பணியைத் தொழிற்திணைக்களம் ஆற்றுவதுடன் தொழிற்சட்டங்களை நடைமுறைப் படுத்தும் பொறுப்பும் தொழிற் திணைக்களத்தையே சார்ந்துள்ளது.

## கல்வியின் வரையறை

❀ ஒருமைக்கட்டான் கற்ற கல்வியொருவற்கு எழுமை யுமேமாப்புடைத்து

- குறள்

❀ உற்றுழியுதவியு முறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்ற னன்றே.

- புறநானூறு

❀ நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால் நெஞ்சத்து. கல்வியழகேயழகு

- நாலடியார்

❀ ஓதுவது ஒழியேல்

- ஆத்திசூடி

❀ கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சையுகினும் கற்கை நனறே.

- வெற்றிவேற்கை

❀ கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.

- கொன்றைவேந்தன்

❀ அறம் பொருள் இன்பம் வீடுபயக்கும் புறங்கடை நல்லிசையு நாட்டும்-உறங்கவலொன்று உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லைச். சிற்றுயிர்க்குற்றதுணை.

- நீதிநெறிவிளக்கம்

## உங்களுக்கு நாற்பது...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தல் போன்றவற்றுடன் உணர்ச்சி சம்பந்தப்பட்ட வாழ்க்கை மிக முக்கியமாகும். ஏனெனில் தேகப்பயிற்சி, சீரான உணவு போன்றவைகள் கூட ஒரு நல்ல மனோநிலை விளைவிக்கும் பயனை மிஞ்சக் கூடிய பயனை விளைவித்து விடாதெனினும், நல்ல மனோநிலையானது அவரவர் உருவாக்கிக் கொள்ள வேண்டியதொன்றாகையால் வேலைத் தொல்லைகளிலிருந்து விடுபட்டிருப்பது வேண்டாத சண்டையில் உணர்ச்சி வசப்பட்டு ஈடுபடுவது முதலியவற்றை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும். இதன் மூலம் நரம்பு மண்டலம் பாதிப்புறுவதற்கு இடமுண்டு.

நல்ல மனோநிலையென்பது செயலூக்கமிக்க பொழுது போக்குடனேயே உருவாகும் கானகத்தில் உலாவித் திரிதல், பயனுள்ள நாவல்கள், நாடகங்கள் பார்த்தல், ஏதாவதொரு மகிழ்ச்சிப் பொழுதுபோக்காகக் கொள்ளல் போன்ற சிறந்த மனோநிலையைப் பெற்றுத்தரும்

எனவே, ஒரு நோயை எதிர்த்துப் போராடுவதற்குச் சிறந்த மார்க்கம் அது வராமல் தடுத்துக் கொள்வதேயாகும்; ஒரு நோயை வெற்றிகாண வேண்டுமாயின், அதனை முதலில் உரிய தருணத்தில் கண்டறிய வேண்டும். இன்று சிலர் தாம் நோய்வாய்ப்பட்டிருப்பதையே அறிந்து கொள்ளாமல் காலந் தள்ளியிருப்பதும், தனக்கு இரத்த அழுத்தக்கோளாறு இருப்பதையே தெரியாமல் தேவையான சிகிச்சை பெறாமலிருப்பதும் நோயானது பாரிய விளைவை உண்டுபண்ண சாதகமாக அமைந்து விடுகின்றது மிகு இரத்த கோளாறு உடனடியாகக் கடும் விளைவுகளை ஏற்படுத்தாமையும் இதற்குக் காரணமாகும். ஆரம்பத்தில் சோர்வு, களைப்பு, பலவீனம், அவ்வப்போது ஏற்படும் இந்நோயின் ஆரம்பக்குணங்களை வெறும் ஜல தோஷசக் கோளாறு எனப் புறக்கணித்தும் இதற்கோர் முக்கியகாரணமாகும்.

எனவே நாற்பது வயதைத் தாண்டியவர்களுக்கு இத்தகைய கோளாறுகள் தோன்றினால் அவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவதே சிறந்தது. ஆயினும், சிலர் வைத்தியரைப் போய்ப் பார்க்கும் அளவுக்கு இப்போது என்ன நேர்ந்து விடப் போகிறது என்ன நேர்ந்துவிட்டது என்று அசட்டையாக இருக்கவும் செய்கிறார்கள். துரதிஷ்டவசமாக இன்று வைத்தியரை நாட நேரமில்லை என்று நினைப்பவர்கள், வைத்தியரை நாளைக்குக் கூடப் போய்ப்பார்க்க நேரமில்லாது போய்விடலாம். சிந்தித்துச் செயற்படுங்கள்.

---

## வணிகக்கல்வி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மிக குறுகிய பண நிரம்பல்:-

குறித்த காலத்தில் பொதுமக்களிடமுள்ள தாள் குற்று நாணயங்களையே மிகக்குறுகிய பண நிரம்பல் ஆகும். இது $M_0$ என குறிக்கப்படும்.

குறுகிய பண நிரம்பல் ($M_1$):-

குறித்த காலத்தில் பொதுமக்களிடமுள்ள தாள், உலோக நாணயங்களையும், வணிக வங்கியிலுள்ள கேள்வி வைப்புகளையும் உள்ளடக்கியதே குறுகிய பண நிரம்பல் ஆகும்.

$M_1$ = தாள் உலோக நாணயம் + கேள்வி வைப்புகள்

விரிந்த பண நிரம்பல் ($M_2$):-

குறித்த காலத்தில் பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்களையும் வணிக வங்கிகளிலுள்ள கேள்வி வைப்புகளையும் அணிமைய பணத்தையும் உள்ளடக்கியதே விரிந்த பண நிரம்பல் ஆகும்.

$M_2$ = தாள் உலோக நாணயம் + வங்கிப்பணம் + அணிமைய பணம்

**பணவீக்கம் - பணச்சுருக்கம் வேறுபடுத்துக?**

நாட்டில் பொருட்கள் சேவைகளின் பொதுவிலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுமாயின் அது பணத்தின் வலுவை குறைக்கும் இதனையே பணவீக்கம் என்பர்.

மாறாக, ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் பொது விலைமட்டம் தொடர்ச்சியாக குறைவடைந்து செல்லுமாயின் அதன் மூலம் பணத்தின் வலு அதிகரிக்கும் இதனையே பணச்சுருக்கம் என்பர். பொதுவாக பணவீக்கம் பொருளாதாரத்துக்கு சாதகமாயும் அமையும்

**முழுப்பெறுமதி - முகப்பெறுமதி எவ்வாறு வேறுபடுகிறது?**

பணத்தை நோக்குகையில் முழுப்பெறுமதி என்பது அதனை உருவாக்குவதற்கு எடுத்த செலவும் அதன் முகப் பெறுமதியும் சமமாய் காணப்படும் உதாரணமாக தங்க நாணயம் வெள்ளி நாணயம் என்பன முழுப்பெறுமதி உடையவை.

மாறாக முகப்பெறுமதி என்பது உருவாக்கல் செலவிலும் பார்க்க பன்மடங்கு உயர்வாக முகப்பெறுமதி குறிக்கப்பட்டிருப்பதை குறிக்கும் உதாரணமாகத் தற்கால தாள் நாணயங்களையும், பதிலிட்டு பணங்களையும் குறிப்பிடலாம். இவற்றின் உருவாக்கல் செலவு குறைவாகும்.

எனினும் தற்காலத்தில் முழுப்பெறுமதி நாணயங்களான தங்க, வெள்ளி நாணயங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது. முகப்பெறுமதி நாணய பயன்பாடே அதிகரித்து வருகின்றது.

---

## அஞ்சா நெஞ்சம் வேண்டும்!

இரும்பு போன்ற தசைகளும், எஃகுப் போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்க முடியாதவாக்ராயுதம் போன்ற அளவற்ற மனவலிமையும் வாய்ந்தவர்களே நம் நாட்டிற்கு இப்போது தேவை. இந்த அண்ட சராசரங்களின் அந்தரங்க இரகசியங்களை எல்லாம் ஊடுருவி ஆழ்ந்து அறியக்கூடிய மனவலிமை; ஆழ்ந்த கடலின் அடித்தளத்திற்குபோக வேண்டியிருந்தாலும் மரணத்தை நேருக்கு நேரே சந்திக்க வேண்டி வந்தாலும், எடுத்த காரியத்தை எவ்வாறேனும் முடிக்கும் அஞ்சா நெஞ்சம் - இவையே நமக்கு இப்போது வேண்டும்.

- சுவாமி விவேகானந்தர்

# மண்வளம்

## உங்கள் பயிருக்குத் திரவப்பசளை அவசியமா?

பயிர்கள் நன்கு வளர்வதற்கும். அதனூடாக அதிகளவான விளைச்சலைப் பெறவும் மண்வளம் மாத்திரம் போதுமானதல்ல. பயிர்களினால தொடர்ச்சியாக அகற்றப்படும் போசனைச் சத்துக்களை மீண்டும் மண்ணிற்கே இடுவதும் அவசியமானதாகும. தாவரப் போசனைச் சத்துக்கள் அடங்கிய பசளைகளை இடுவதனால் இவ்வாறு மீண்டும் வழங்கலாம்.

மண்ணிற்கு இடப்படும் பசளைகளைத தவிர, நீரில் நன்கு கரையும் பெரும்பாலான பசளைகள் தறபோது விற்பனை செய்யப்படுகின்றன, இவை நீரில் கரையும தூளாகவோ அல்லது திரவமாகவோ உறபத்தி செய்யபபடுகின்றன. இவறறை நீரில் கரைத்து இலைகளுக்குவிசிறுமபோது அவறறை பயிர்கள் உறிஞ்சும.

### மண்வளம்

தாவரங்களுக்கு தேவையானவற்றில் சிறிதளவை மாத்திரமே திரவப பசளைகள வழங்கும். இவற்றை பசறிவாகப் பயிர்களுக்கு விசிற முடியாது; அதிக தடவைகள் விசிறுமபோது பாதிப்புக்கள் ஏற்படலாம. எனவே கவனமாக இருத்தல் வேண்டும். திரவப் பசளைகளை விசிறுவதால் மண்வளம் விருததியடையாது. திரவப் பசளை மாத்திரம் விசிறும போது இயற்கையான மண் வளம் குறையும. எனவே பயிருக்கு அவசியமான திண்மப் பசளைகளையும் வழங்குவது அத்தியாவசியமாகும்.

### தேர்வு செய்தல்

சந்தையில் பல்வேறு வகையான திரவப் பசளைகள் உள்ளன, அவற்றில் காணப்படும் போசனைச் சத்துக்களும், அவற்றின் அளவும வேறுபடும். அதிகளவான நைதரசனைக் கொண்ட திரவப் பசளைகள், இலை, மரக்கறிகளுக்கும், அலங்காரத் தாவரங்களுக்கும் உகந்தவை ஆகும். ஆனால் காய்கள், பூக்கள், அலங்காரப் பூக்கள் என்பனவற்றிற்கு அதிகளவான பொட்டாசியம் கொண்ட பசளைகளை விசிறல் வேண்டும். கிழங்குப் பயிர்களுக்கு பொசுபரசு அடங்கிய திரவப பசளைகள தேவையாகும்.

### விசிற வேண்டிய பருவமும், நேரமும்

பயிரின் வளர்ச்சிப் பருவத்திற்கேற்ப விசிற வேண்டிய திரவப் பசளைகளைத் தெரிவு செய்ய வேண்டும். ஆரம்பத்தில் நைதரசன் அடங்கிய பசளைகளை விசிற வேண்டும். பூக்களும், காய்களும் உருவாகும் போது பொட்டாசியப் பசளையை விசிற வேண்டும். சந்தையில் பல்வேறு வகையான திரவப் பசளைகள் விற்பனை செய்யப்பட்டாலும் கூட அவற்றில் காணப்படும் போசனைப் பொருட்களில் அதிக வேறுபாடுகள் காணபபடுவதில்லை. பயிர்கள் பூக்கும் போதும் அதிகளவான இலைகள் காணப்படும் போதும் விசிறுவதால் அவற்றின் வினைத்திறன் அதிகமாகும் நன்கு சூரியவெளிச்சமுள்ள நாளில் காலை 10.00 - 11.00 மணிக்கிடையில் விசிறுவது மிகவும் உகந்ததாகும். மழை இல்லாத நாளில் விசிறுவதும் முக்கியமாகும. இலையின் கீழ்பகுதிக்கு விசிறுவதால் சிறந்த பயனைப் பெறலாம.

### தேவையானபோது மாத்திரம் விசிறவும்

பயிருக்குத் தேவையான போசனைச் சத்துக்களில் மிகச் சிறிதளவை மாத்திரமே திரவப் பசளைகள மூலம் வழங்கலாம். எனவே மண்ணிற்கு இடவேண்டிய திண்மப் பசளைகள் அனைத்தையும் இடுவது அவசியமாகும். ஆனால் மண்ணிலிருந்து ஏதாவதொருபோசனைச் சததை உறிஞ்ச முடியாத வேளையிலேயே திரவப் பசளைகளை விசிறல் வேண்டும். தாவரத்தை அவதானித்து பற்றாக்குறை அறிகுறி தோன்றுமாயின் திரவப் பசளைகளை விசிறல் வேண்டும.

### மண்ணின் ஈரப்பதன்

மண்ணில் காணப்படும் ஈரப்பதன் போசனைச் சத்துக்களை உறுஞ்ச முடியாத அளவு குறைவாகக் காணப்படும்போது அல்லது வேறு வழிகளில் நீர் ஊற்ற முடியாத சந்தர்ப்பங்களில் திரவப் பசளைகளைப் பயன்படுத்தலாம். விசேடமாக இலை ஓரங்களில் நிறமாற்றம் ஏற்படல், பயிரின் வளர்ச்சி குன்றல், வேர்த்தொகுதி பலவீனமடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் திரவப் பசளைகளைகளை விசிறுவதன் மூலம் உடனடிப் பயனைப் பெறலாம் பயிரின் போசனைப் பற்றாக்குறை அறிகுறிகளை அடையாளம் காண முடியுமாயின் தேவையான திரவப் பசளையை விரைவில் விசிறலாம்.

விசேடமாக, சாடிகளில் வளர்க்கப்படும் அலங்காரத் தாவரங்கள், பூக்கள், நாற்று மேடை, மண்ணில்லாத ஊடகங்களில் வளர்க்கப்படும் தாவரங்கள் போன்றவற்றிற்குத் திரவப் பசளைகள் பயனுள்ளதாகும். ஆனால் மரக்கறிகள், பழப்பயிர்களுக்கு இவை பயன்தரும் என நிரூபிக்கப்படவில்லை. (10 ம் பக்கம்பார்க்க )

## கோவாவில இலை அரிப்புழு

### வெள்ளைப்பூடு கைகண்ட மருந்து

கோவாவில் மிகவும் ஆபத்தானதாகப் பீடிக்கும் ஒரு பீடை இலையரிப் புழு டயமன்ட்முதுகு அந்துப் பூச்சி ஆகும். இதனால் பெரும்பாலும் முழுக்கோவாத் தோட்டமும் அழிந்து போகலாம். எனவே அனேகமான விவசாயிகள் அதிகளவான கிருமிநாசினிகளை விசிறி இதனைக்கட்டுப் படுத்துகின்றனர்.

கிருமிநாசினிகள் மக்களுக்குப் பெருந் தீங்குகளை ஏற்படுத்துவனவாகவுள்ளன. உயிராபத்துக்களையும் ஏற்படுத்தக்கூடியனவாக உள்ளன, இதனால் கிருமிநாசினி பாவிக்கப்படாத பயிர்களுக்கே மக்கள மத்தியில் பெரிய மதிப்பும், கிராக்கியும் ஏற்படுகிறது.

இந்தியாவில் இயற்கையாகக் கிடைக்கும் தாவரப் பொருட்களைப் பயன்படுத்தி பலபீடைகள் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டுவருகின்றன. இந்த வகையில் வெள்ளைப் பூண்டைப் (உள்ளியை) பயன்படுத்தி கோவாவினைப் பீடிக்கும் ''டயமன் முதுகு அந்துப்பூச்சி''யைக் கட்டுப் படுத்தலாம். ( 10ம் பக்கம் பார்க்க )

## உங்கள் பயிருக்கு..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பின்வரும் பல காரணிகளால் திரவப் பசளைகளை விசிறுவதற்கு விவசாயத் திணைக்களம் சிபாரிசு செய்வதில்லை.

* குறைவான போசணைச் சத்துக்கள் உள்ளன.
* சரியான தரம் உறுதி செய்யப்படவில்லை.
* அதிகளவில் பயன்படுத்த முடியாது
* தேவையான போசணைச் சத்தை மாத்திரம் விசிற முடியாது.
* விலைக்கேற்ப விளைச்சல் அதிகரிப்பதில்லை.

எனவே திரவப் பசளைகளை விசிற முன்னர் பல தடவைகள் சிந்தித்து மிக அவசியம் எனக் கருதினால் மாத்திரம் விசிறவும். இதன் மூலம் அநாவசியச் செலவைக் குறைத்துக் கொள்ள முடியும்.

## கோவா வில..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான பொருட்கள்

வெள்ளைப் பூடு - 250 கிராம்
சோப (ஏதாவது) - 10 "
மண்ணெண்ணெய் - 01 தே. கரண்டி
நீர் - 01 லீற்றர்

தயாரிக்கும் முறை

முதலில் வெள்ளைப்பூண்டை பசைபோன்று அரைக்கவும் இதனை நீரில் கரைத்துப் பெறப்படும் கலவையுடன் சோப்பைக்கரைத்து இவற்றோடு மண்ணெண்ணெயைச் சேர்க்கவும். இக்கலவையை ஒரு இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாட்காலை வடித்தெடுக்கவும். வடித்துப் பெறப்படும் ஒரு லீற்றர் கலவையுடன் 20 லீற்றர் நீரைச் சேர்த்து அதனைப் பயிர்களுக்கு நேரடியாக விசிறவும்.

20 லீற்றர் கலவையை கால் ஏக்கர் (1000 சதுர மீற்றர்) பரப்பிற்குப் போதுமானதாகும். இக் கலவையை இருவாரங்களுக்கொருதடவை விசிற வேண்டும். இதனால் கோவாவில் டயமன்முதுகு அந்துப்பூச்சிகளின் தாக்கத்தைத் தவிர்க்கலாம்.

இத்துடன் கடுகை விதைப்பதும் முக்கியமானதாகும். தோட்டத்தைச் சுற்றிவர கடுகை விதைக்கவும் கடுகு முளைத்து வரும்போது இதனால் பூச்சிகள் கவரப்படும்.

இரண்டு வாரத்தின் பின் கடுகை பிடுங்கி விட்டு மீண்டும் விதைக்கவும். இவ்வாறு தொடர்ந்து செய்யவும்.

## புதிய இயக்குனர்சபை

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது புதிய இயக்குனர்சபைத் தெரிவுசெய்யப்பட்டுள்து.

இயக்குனர் சபைத் தலைவர் திரு. வி.சுப்பிரமணியம், உப-தலைவர் திரு. செ. சிவராசா, பணிப்பாளர்களாக, கோ. பாலசிங்கம், அ. தம்பிப்பிள்ளை, க கந்தசாமி, இ. கிருபாகரன், ந குகதாஸ், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

## புதிய இயக்குனர்சபை

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 7 - 4 - 2001ல் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய இயக்குநர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் திரு.ச. ஏகாம்பரநாதன் உப-தலைவர் திரு. க. கமலநாதன், இயக்குனர்களாக திருவாளர்கள், வ. சிவலிங்கம், நா. சுந்தரலிங்கம், க குமாரசுவாமி, த. கிருஷ்ணராசா, அ சுதந்திரகுமார், ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இலங்கையின் முதலாவது பெண் பைலட்

இலங்கையின் தேசிய விமானமானஶ்ரீலங்கன்ஏயர்லைன்ஸ் SriLankan Airlines இன் முதலாவது பெண் "பைலட்" ஆகு அனுஷா முஹமட் என்னும் இளம் பெண் இணைந்து கொண்டார்.

கொழும்பு ஹொலி பமிலி கொன்வென்ற் கல்லூரி பழைய மாணவியான இவர் பாடசாலைப் படிப்பிற்கு பின்னர் விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்றார். இவர் தறபோது புதிய ஏயாபஸ் விமானத்தை ஓட்டுவது சுலபம் எனக் கூறுகிறார்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

கூட்டுறவுக் கல்லூரி வடக்கு கிழக்கு மாகாணம் திருகோணமலையினால் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு இறுதிப் பரீட்சையில் 13மாணவர்கள் தோற்றி 10 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ந. இரத்தினேஸ்வரி, இப் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்தி அடைந்துள்ளார். ஏனைய பயிற்சியாளர்கள் மூன்றாம் பிரிவில் சித்தி அடைந்துள்ளனர்

சித்தியடைந்த சங்கப்பணியாளர்கள் விபரம் வருமாறு.

கா. கோபாலகிருஷ்ணன் (சாவகச்சேரி ப. தெ. வ. அ. கூ. சங்கம்) திருமதி ச. பரமானந்தம் (யாழ் மாவட்ட சி. க. கூ ச. சமாசம்)

வெளிவாரியாக தோற்றிய மாணவர்களில் சித்தி அடைந்தோர் விபரம் வருமாறு.

ப. சத்தியரூபன், இ. நிசன், ந. துளசிதாஸ், செ. நற்குணம், அ. பிரேமநாத், க. அஜயசீலன், தே. ஜெயானந்தன்.

## பணியாளர் கௌரவிப்பு

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 25 வருடம் சேவை செய்த 8 பணியாளர்களை கடந்த மாதம் கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ. கு. சண்முகநாதன் தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்களுக்கு தலா 500 ரூபா பெறுமதியான தேசியசேமிப்பு வங்கியினால் பரிசுச்சான்றிதழும் சங்கத்தின் கிராமிய வங்கியில் அவர்களின் பெயரிலான சேமிப்புக்கணக்கில் தலா 2 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டும் சேவை நலன் பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது.

25 வருட சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்கள் விபரம் வருமாறு;

திருவாளர்கள் ஜே. ஆர். குணநாயகம், த. இராஜசிங்கம் ச. பாலச்சந்திரன், வி. ஆறுமுகம், ரி. முருகேசு கே. இரத்தினசிங்கம், ரி. தேவதாசன் திருமதி க கமலாவதி ஆகியோர்

## கூட்டுறவு இயக்கத்தின்

(2ம் பக்கத்தொடர்ச்சி)

கள் பன்மடங்கை அதிகரித்துள்ள இன்றைய நிலையில் ப. நோ. கூ. சங்கங்கள் அங்கத்தவர்களின் நூறு ரூபா பெறுமதியான பங்குப்பணத்தைக் கொண்டு அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை வளங்க முடியாது அங்கத்தவர்கள் சங்கத்திலிருந்து உச்சச் சேவையைப் பெறவேண்டுமானால் பங்கின் பெறுமதியைக் கூடியதாகவும், பங்குத் தொகையைக் கூடியதாகவும் செலுத்த முன் வரவேண்டும். சுவிடன் டென்மார்க், கனடா போன்ற நாடுகளில் உள்ள கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் தமது சங்கத்தில் கூடுதலான பங்குகளையும் பெறுமதி கூடிய பங்குகளையும் கொள்வனவு செய்து சங்கத்தின் பங்குப்பணத்தை அதிகரித்துள்ளமையால் அச்சங்கங்கள் சுதந்திரமாகச் செயற்படுவதுடன் அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவை புரிவதையும் இங்கு குறிப்பிடவேண்டியது மிக அவசியமாகும். பங்கின் பெறுமதியை அதிகரித்தால் ஏழைகள் பணமின்மையால் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர முன் வரமாட்டார்களென்று வாதிப்பாருக்கு போதிய விளக்கம் கொடுக்கவேண்டியதும் எமது தலையாய கடமையாகும். இன்று மூயல் வேகத்தில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுடனும் ஆடம்பரச் செலவுடனும் பங்கொன்றின் பெறுமதியான ரூபா நூறை ஒப்பிடும் பாகும் பொழுது இது மிகக் குறைந்த தொகையென்பது புலனாகும் அத்துடன் பங்கொன்றைப் பெற அங்கத்தவன் ஒருவனால் செலுத்தப்படும் ரூபா நூறு அவனின் வாழ்வில் ஒரு முறைதான் நிகழும் செலவு என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது நலமாகும். ஆதலால் பங்கின் பெறுமதியைக் கணிசமான அளவு அதிகரிப்பதால் எவருக்கும் பாதிப்புகளும் உண்டாகமாட்டாதென்பது வெள்ளிடைமலை.

1. 6 சங்கத்தில் ஏற்கனவே அங்கத்தவராகச் சேர்ந்துள்ள அங்கத்தவருக்கு விற்பனைச் சலுகை விலைச்சலுகை கடன் சலுகை என்பன போன்ற சலுகைகளை பெருமளவில் வளங்குவதன் மூலம் பொதுமக்களைக்கவரச் செய்து அங்கத்தவராக்கிக் கொள்ளலாம். இதற்கான திட்டங்களைத் தயாரித்து துரிதமாகச் செயற்பட சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

1: 7 தனியார் நிறுவனங்களிலும் பார்க்க கூட்டுறவு நிறுவனங்கள் புனிதமான உயர்ந்த பெறுமதி மிக்க சேவைகளை அங்கத்தவர்களுக்கு வளங்குவதன் மூலம் பொதுமக்களைக் கவரச் செய்து அங்கத்தவராக்கிக் கொள்ளலாம்.

2. கூட்டுறவு நிறுவனங்கள் தமது தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தி அதிகரிப்பதன் மூலம் இலாபத்தைப் பன்மடங்காக அதிகரித்துச் சங்கத்தின் சொந்தமுதலை அதிகரித்துக் கொள்ளலாம். மேலைத்தேச கூட்டுறவு அமைப்புக்கள் அங்கத்தவர்களுக்கு வேண்டிய சகல பொருளாதாரச் சேவைகளையும் புரிவதன் மூலம் இலாபத்தை அதிகரித்து தமது சொந்தமுதலை அதிகரித்துக்கொள்கின்றன. இவ்வமைப்புகள் தமது சொந்த முதலை அதிகரித்துக் கொள்வதுடன் தமது இலாபத்திலிருந்து பெரும் பகுதியை வறிய நாடுகளினதும் குறைவருமதி நாடுகளினதும் கூட்டுறவு அமைப்புகளின் அபிவிருத்திக்காக பெருமளவு நிதியை நன்கொடையாகவும், உதவுதொகையாகவும் வழங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கவிடயமாகும். மேலைத்தேச நாட்டுக் கூட்டுறவு அமைப்புக்களைப் போன்று எமது கூட்டுறவு அமைப்புக்களும் தமது தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தி அதிகரிக்க ஆவன நடவடிக்கைகளை எடுக்கப்படவேண்டும்.

2. 1 பெரும்பாலான ப. நோ. கூ. சங்கங்கள் ப. நோ. கூ. சங்கங்களாகச் செயற்படாமல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களாகவே செயற்பட்டு வருகின்றன. இவற்றின் தொழிற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டு முழுமையான ப. நோ. கூ. சங்கங்களாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

2. 2 அனேகமான ப. நோ. கூ. சங்கங்கள் மக்களுக்குத் தேவையான அனைத்து நுகர்ச்சிச் சேவைகளையும் புரிவதில்லை. சுவிடன், செக்கோஸ்லவாக்கியா, இஸ்ரேல் போன்ற நாடுகளிலுள்ள பெரும்பாலான கூட்டுறவு அமைப்புக்கள் ஒரு மனிதன் தாய்வயிற்றில் கருவுற்ற காலம் தொடக்கம் சுடுகாட்டில் சங்கமமாகும் வரை அவனின் வாழ்வுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளையும் புரிந்து வருகின்றன. இவையே முழுமையான கூட்டுறவு அமைப்புக்களாகும். இவற்றைப் போன்று எமது ப. நோ. கூ; சங்கங்களும் உருவாக்கப்பட வேண்டும்.

2. 3 அனேகமான ப. நோ. கூ. சங்கங்கள் அரசின் முகவர் வேலைகளைப் புரிவதில் மட்டுமே அதிக கவனம் எடுத்து வருகின்றன. இச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்குத் தேவையான பொருளாதார, சமூக கலாச்சாரச் சேவைகள் அனைத்தையும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ப. நோ கூ. சங்கங்கள் நுகர்ச்சிப் பொருள் விநியோகத்தில் மட்டும் ஈடுபடாமல் அங்கத்தவர்களுக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகிக்கவேண்டும் பாண், பிஸ்கட், அப்பளம், பழரசம், சோடா, ஜாம் ஊறுகாய், நல்லெண்ணை, தேங்காய் எண்ணை போன்ற பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் மூலம் அதிக இலாபத்தை உழைக்கலாம்

2. 4 ப. நோ கூ. சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் செய்யும் பொருட்களை ஆதரித்து அவற்றையே கட்டாயமாகக் கொள்வனவு செய்யவேண்டும்.

2. 5 ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் தனியார் நிறுவனங்களை ஆதரிக்காமல் பிரதேசமாவட்ட, தேசிய ரீதியான கூட்டுறவு சமாசங்களை நிறுவி வெளிநாட்டிலிருந்து உற்பத்தியாளர்களுடன் தொடர்பு கொண்டும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மூலம் அங்கத்தவர்களுக்குச் சிறந்த சேவை புரிவதுடன் உச்ச இலாபத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

2. 6 ப. நோ. கூ. சங்கங்கள் கடன் விற்பனை செய்யாமையால் அங்கத்தவர்கள் கடன் பெறுவதற்காக தனியார் கடைகளை நாடுவதினால் சங்கங்களின் விற்பனை பாதிக்கப்படுகின்றது. இதனை நிவர்த்திசெய்ய கூட்டுறவுச் சங்கங்கள் ஆணையாளரின் சுற்று நிருபத்திற்கமைய ''பாதுகாப்புக் கடன் விற்பனைத்திட்டத்தை'' அமுல் நடத்துவதன் மூலம் விற்பனையையும் இலாபத்தையும் அதிகரிக்கலாம்.

2. 7 திட்டமிட்ட கொள்வனவு, தரமான பொருள் விலை நிர்ணயம், விளம்பரம் செய்தல், காட்சிப்படுத்தல் கிளைகளை நவீனப்படுத்துதல், சில்லறைக் காசு விற்பனை முறை, விற்பனை அதிகரிப்புக்கு ஏற்ப பணி

(12ம் பக்கம் பார்க்க)

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87



# சிகரட்ப்பழக்கத்தை கைவிடுங்கள்; அனாவசிய இறப்பிலிருந்து விடுபடுங்கள்

சிகரட் இது பலராலும் ஊதி'' பின்னர் எறியப்படும் மனிதனின் பிரதான உயிர்க் கொல்லியாகும்.

தொடர்ச்சியாக சிகரட் பாவிக்கும் பழக்கத்தினால் நோய்களும், உயிராபத்துக்களும் ஏற்படுகின்றன. இதயமான விட பறகள் கறைப்படுதல், நகங்களும், பற்களும் நிறம் மாறி ஒரு வகை மஞ்சள் நிறமாக மாறுதல், தோலின் (முகம் உட்பட) வழுவழுப்பும், செழிப்பும் குன்றி சுருக்கமடைந்து முதுமையாகு தோற்றத்தைப் பெறல் போன்ற விளைவுகளோடு நீங்காத கொடிய புகை உடலுக்குள் பரவப் பரவ பசியின்மை அதிகரிக்கின்றமை என்பன போன்ற கணமட்டுத்த உண்மைகள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன,

சிகரட் பழக்கத்தை விட்டு விடுவதென்பது ஆரம்பத்தில் மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தினாலும் படிப்படியாக அதனை விட்டு விடுவதே சாலச் சிறந்ததாகும். மனதைக்கட்டுப்படுத்தி மன உறுதியோடு நின்றால் நிச்சயம் இந்தக் கொடிய பழக்கத்தை அடியோடு நிறுத்தி விடலாம்.

சிகரட் பிடிக்கும்பழக்கத்தை நிறுத்தி விட்டால். எத்தனையோ வகையான நோய்களில் இருந்து நிவாரணம் பெறக்கூடியதாக இருக்கும்

❁ இருபது நிமிடங்களில் :

இரத்த அழுத்தம் சீராகிறது கை, கால் பகுதிகளின் உஷ்ண நிலை சீராகி சரியான அளவுக்கு வந்து விடுகிறது.

❁ எட்டுமணி நேரத்தில் :

இரத்தில் கரியமிலவாயுவின் அளவு குறைந்து, இரத்த ஓட்டத்தில் மேலும் பிராணவாயு அதிகமாய்ப் போகிறது.

❁ 24 மணி நேரத்தில்:

இருதயம் சீராக வேலை செய்ய ஆரம்பித்து சுவாசம் மேலும் சீராக அமைகிறது.

❁ 48 மணி நேரத்தில் ;

நரம்புத்தளர்ச்சிகுறைகிறது உணவில் ருசி அதிகமாகிறது நடக்கும் போது கால்கள் மேலும் வலுவடைகின்றன.

இரண்டு வாரங்கள் முதல் சாதாரணமாக மூன்று மாதங்களுக்குள் இருமல் ஏற்படுவது படிப்படியாகக் குறைந்து சாதாரண ரத்த ஓட்டத்தோடு சிரமமின்றி மூச்சுவிட முடிகின்றது.

❁ 4 முதல் 1½ மாதங்களில்

சோர்வு, நரம்புத்தளர்ச்சி சளி, இருமல் நீங்கி வலுவோடு தொற்று நோய் வாய்ப்பு குறைகிறது இயல்பான சாப்பாட்டு ஜீரணத்தோடு, இக்காலங்களில் அவதானிக்கலாம்.

❁ ஓராண்டு காலத்தில் ;

இருதயநோய், புற்று நோய், காசநோய், ஏற்படும் வாய்ப்பு சரிபாதியாகக் குறைகிறது நல்ல பசியோடு சீரான தூக்கமும், நம்மை ஒழுங்கு சுறுசுறுப்பாகவும் இயங்கமுடிகிறது.

குறிப்பு: அமெரிக்க புற்றுநோய்க்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள தகவல்

## கூட்டுறவு இயக்கத்தின்

(11ம் பக்கத்தொடர்ச்சி)

யாளர்களுக்கு உதவிப்பு வழங்கல் போன்ற இன்னோரான விதப்பனை அதிகரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமானத்தையும் இலாபத்தையும் அதிகரிக்கலாம்.

2. 8 பொருட்கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாடு காசுக்கட்டுப்பாடு, செலவுக்கட்டுப்பாடு, சொத்துக்கட்டுப்பாடு முகாமைக்கட்டுப்பாடு, பாதீட்டுக் கட்டுப்பாடு, சிறந்த கணக்காய்வு போன்ற இன்னோரன்ன அகக்கட்டுப்பாட்டு முறைகளைச் சிறப்பாக கடைப்பிடிப்பதன் மூலம் நிர்வாகச் சீர்கேடு, மோசடி, தவறு, அழிவு, சேதாரம், காய்வளவு நட்டம் போன்ற இழப்புக்களைப் பூரணமாகக் கட்டுப்படுத்தி இலாபத்தை அதிகரிக்கலாம்.

2. 9 அங்கத்தவர்களின் தொழிலுக்கும் ஏனைய தேவைகளுக்கும் தேவையான கடன்களை மதிப்பிட்டுத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் கூடுதலான இலாபத்தை உழைத்துக் கொள்ளலாம்.

2. 10 கிராமிய வங்கிச் சேவையை பன்முகப்படுத்தி அபிவிருத்தி செய்தல் வேண்டும். கடன் வழங்கல், அடகுத் தொழில் சேமிப்பை அதிகரித்தல், புனர்நிர்மாண வங்கிச் சேவைபுரிதல், அரசாங்க நிறுவனங்களினதும் சபைகளினதும் முகவராக வங்கிச் சேவைபுரிதல் போன்றவற்றின் மூலம் கிராம வங்கிச் சேவைகளை அதிகரித்துக் கூடுதலான இலாபத்தை ஈட்டிக் கொள்ளலாம்.

2. 11 அங்கத்தவர்கள் தமக்குத் தேவையான பசளைவகைகள் ருமிநாசினி உபகரணங்கள் போன்றவற்றைப் பெருமளவில் தனியார் நிறுவனங்களிலே கொள்வனவு செய்து வருகின்றனர். இவற்றை முழுமையாக ப. நோ. கூ. சங்கங்கள் வழங்குவதன் மூலம் தமது இலாபத்தை அதிகரிக்கலாம்.

2. 12 அங்கத்தவர்கள் தமது உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து தரம்பிரித்து பதனிட்டு பொதியிட்டு விலையிட்டு சந்தைப்படுத்தல் மூலம் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

2, 13 ப. நோ. கூ. சங்கங்கள் அரசாங்க நிறுவனங்களிலிருந்து ஒப்பந்த வேலைகளையும் கட்டுமான வேலைகளையும் பொறுப் பேற்றுச் செய்வதன் மூலம் அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுடன் பெருமளவிலான இலாபத்தையும் ஈட்டிக் கொள்ளலாம்,

2. 14 சங்கத் தொழில் பரப்பில் அபிவிருத்தி செய்யக்கூடிய சிறு ரக, நடுத்தர ரக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் மூலமும் மூலவளங்களை அபிவிருத்தி செய்தல் மூலமும் ப. நோ. கூ. சங்கங்கள் தமது இலாபத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

2. 15 மேற்கூறியவை தவிர்ந்த அங்கத்தவருக்குத் தேவையான போக்குவரத்து வசதி, பந்தல் கதிரைச் சேவை வசதி, பொழுதுபோக்குச் சேவை வசதி, அந்தியகாலச் சேவை வசதி, நீர் விநியோகச் சேவைவசதி கூட்டுறவுப் பண்ணை நடத்துதல் போன்ற தொழிற்பாடுகள் மூலம் ப. நோ. கூ, சங்கங்கள் தமது இலாபத்தை அதிகரித்து சொந்த முதலைத் திரட்டிக் கொள்ளலாம். (தொடரும்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2001ம் ஆண்டு சித்திரை மாதம் வெளியிடப்பட்டது.